செ.வெ.எண்:17 நாள்:11.05.2018

**இந்தியாவிலேயே தமிழகத்தல் உள்ள கரூரில் முதன்முதலாக ரூ.39.72 இலட்சம் மதிப்பில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளம் அமைக்கப்பட்டுள்ளது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் இன்று (11.05.2018) நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தமிழக போக்குவரத்துத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் போக்குவரத்துத்துறை ஆணையர் திரு.சி.சமயமூர்த்தி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ரூ.39.72 இலட்சம் மதிப்பில் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளத்தை திறந்து வைத்து ஓட்டுநர் உரிமம் பெறுபவர்கள், கட்டுப்பாட்டு அறையில் கண்காணிக்கப்படுவதை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் கரூர் மாவட்டத்தில் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் தேர்வுதளம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்ட எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி மாணவர்களால் மென்பொருள் மூலம் தேர்வுதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2.50 கோடி வாகனங்கள் இயக்கப்படுகிறது. அதன் காரணமாக ஆண்டுக்கு 16,000 பேர் விபத்துகளில் இறக்கின்றனர். இதை குறைப்பதற்காகவும், சாலை விதிகளை கடைபிடிப்பதற்காகவும் தமிழகத்தில் 30கி.மீ. சுற்றளவுக்கு ஒரு பொக்குவரத்து ஆய்வாளர் அமைக்கப்பட்டுள்ளது. சாலை விதிகளை கடைபிடிப்பதற்காகவும், சாலை பாதுகாப்பை அதிகரிக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.20 கோடியிலிருந்து ரூ.60 கோடியாக உயர்த்தி வழங்கி உள்ளார்கள். இதில் கரூர் மாவட்டத்திற்கு ரூ.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் விபத்து நடக்கும் இடங்கள் கண்டறியப்பட்டு 10 உயர் மின் கோபுரவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாலை விதிகளை மீறும் ரூ.2.25 இலட்சம் ஓட்டுநர் உரிமம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக 6% வாகன விபத்து குறைந்துள்ளது. அரசு சாலை பாதுகாப்பு குறித்து சட்டங்கள் இயற்றினாலும், தனி மனித ஒழுக்கத்துடன் சாலை விதிகளை வாகன ஓட்டிகள் கடைபிடிக்க முன்வர வேண்டும். அதன் மூலமாக விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அரசு முதன்மை செயலர் மற்றும் போக்குவரத்து ஆணையருமான திரு.சி.சமயமூர்த்தி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் 2.50 கோடி வாகனங்கள் இயக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு ரூ.7000 வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. அதிக வாகனம் உற்பத்தியும், பதிவும் உள்ளதால் சாலை விதிகளை குறைப்பதற்காக உச்சநீதிமன்றம் ஒரு குழுவை அமைத்து கண்காணித்து வருகிறது. நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் தரமாக சாலைகள் அமைந்துள்ளன. அதிநவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வாகனங்களில் மிக வேகமான வாகனங்கள் இயக்கப்படுவதால் விபத்துகள் நடைபெற்று வருகிறது. அதை குறைப்பதற்காக மிக துல்லியமாக கணிக்கக்கூடிய முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளம் அமைக்கப்பட்டுள்ளது. இதை படிப்படியாக 14 நகரங்களில் அமைக்கப்படவுள்ளது. தலைக்கவசத்தை வாகன ஓட்டிகள் அனைவரும் அணிந்து சாலை விதிகளை கடைபிடித்து விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கிட முன்வர வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.டி.கே.ராஜசேகரன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், போக்குவரத்து இணை ஆணையர்கள் திரு.சிவக்குமரன், திரு.வேலுச்சாமி, துணை ஆணையர் திரு.உமாசக்தி, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சுப்பிரமணியன், எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரி தாளாளர் திரு.ராமகிருஷ்ணன், லாரி உரிமையாளர் சம்மேளத்தலைவர் திரு.ராஜ், வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், வட்டாட்சியர் திரு.கலியமூர்த்தி, வாகன ஆய்வாளர்கள் திரு.அன்பு, திரு.ஆனந்த், திரு.தனசேகரன், திருமதி பிரதீபா, திரு.விஜயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**